# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 68/2016 | **CNR No.** | : | TNKI13-000713-2016 |
| **Name** | : | தனபதி | **Father's Name** | : | சின்னசாமி |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 50 | **Village** | : | ஒட்டம்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 3:15 PM | **End Time** | : | 3:30 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 05.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

(1) **சர்வே எண்.63/3** ஆனது **சர்வே எண் 63/3 ஏ** மற்றும் **சர்வே எண். 63/3 பி** என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சின்னதம்பி மற்றும் குழந்தை ஆகியோர்கள் 63 வருடங்களுக்கு முன்பே பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் இருக்கலாம். 1ம் பிரதிவாதி குழந்தைக்கு மேற்படி பாக பிரிவினையில் **சர்வே எண்.63/3 பி** ல் 24 சென்டும் மற்றும் பிற சொத்துக்களும் ஒதுக்கப்பட்டன என்றால் சரியல்ல. மேற்படி பாகப் பிரிவினையில் ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு தான் **பட்டா எண்.36** குழந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(2) நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் அவர் அவர் பாகத்தை அனுசரித்து பட்டா வழங்கப்பட்டது என்றால் சின்னதம்பி பாகத்திற்கு வழங்கப்பட்டது மற்றவர்கள் உடையது பற்றி தெரியாது. சின்னதம்பிக்கு பட்டா வழங்கப்பட்ட சொத்தை தான் அவர் அனுபவித்து வந்த பிறகு நான்

அனுபவித்து வருகிறேன் என்றால் ஆமாம், வாய்மொழி பாகப் பிரிவினை செய்து அனுபவித்து வருகிறோம். யூடீஆர் திட்டத்தில் சின்னதம்பி பெயரில் பட்டா ஏற்பட்ட சொத்துக்கள் தவிர வேற பாகத் சொத்துக்கள் எதுவும் இல்லையா என்றால் இல்லை. யூடீஆர் திட்டத்தில் குழந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்ட சொத்துக்களில் சின்னதம்பிக்கும் எனக்கும், எனது சகோதரர்களுக்கும் எந்த பாத்தியம் உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. சின்னதம்பி பெயரில் பட்டா ஏற்பட்ட சொத்து தான் எனது அண்ணன் கோவிந்தசாமிக்கு பாகத்தில் பெற்று அதை தான் 2ம் வாதி 1998ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். கிரையம் வாங்குவதற்கு முன்பு கோவிந்தசாமி பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. கிரையம் வாங்கிய பிறகு கிரையம் வாங்கிய அளவிற்கு பட்டா ஏற்பட்டதா என்றால் என் பெயரிலும் 2ம் வாதி பெயரிலும் **பட்டா எண்.100** என வழங்கப்பட்டுள்ளது.

(3) **சர்வே எண்.** 63/3 சொத்தானது **63/3 ஏ மற்றும் 63/3 பி** என உட்பிரிவாகி யூடீஆர் திட்டத்தின் கீழே 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் அவர் பாகத் சொத்துக்களுக்கு பட்டா ஏற்பட்டு அவர் அவர் தனி சுவாதினம் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும் அதனை மறைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் அவர் பாக சொத்தை அனுபவித்து வரும் நிலையில் வழக்கை பொய்யாக தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரம் தவறானது என்று அதனால் விளம்புகை மற்றும் தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால்

சரியல்ல. முகாந்திரம் இல்லாமல் வழக்குதாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளுக்கு செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கு எதிராக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது நிலத்தில் நட வந்ததால் தடுத்தேன் அதனால் பொய்யாக புகார் கொடுத்துள்ளார். வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai